தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042 – வைகாசி 13

2011 மே 27, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் **முனைவர் செ.கு. தமிழரசன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:

“ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு”

மேதினி போற்றும் சான்றோர்க்குக் கிடைக்கப்பெற்ற சிறப்பும், பெருமையும் வறட்சியான நிலத்தில் வாடித் தவிக்கும் மக்களுக்குக் கிடைத்த நீர் நிறைந்த குளத்திற்கு ஒப்பானதாகும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்: *பதினான்காவது சட்டமன்றப் பேரவைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, உறுதிமொழியை எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள் எவரேனும் இருப்பின், அவர்கள் இப்போது உறுதிமொழியை எடுத்துக்கொள்ளலாம். இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்ட பிறகே பேரவையில் அமர வேண்டும்.*

இப்பொழுது உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்வதற்கு, செயலாளர் உறுப்பினர்களது பெயர்களைக் குறிப்பிட்டு அழைப்பார்.

(பின்னர், செயலாளர் உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக்கொள்ளும்படி அழைத்தார்.)

கீழ்க்காணும் உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள்:

1. மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி@

2. திரு. ஆர். மனோகரன்@

2. பேரவைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல், அரசமைப்புச் சட்டத்தின் 178-வது பிரிவின்கீழ், பேரவைத் தலைவர் தேர்தல் ஆகும். இப்பதவிக்கான வேட்புத் தாள், சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை விதி 7, உள்விதி 4-ன்படி, பேரவைத் தலைவர் பதவிக்கு முறைப்படி மொழியப்பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கவேண்டும். அவர்களின் விவரம்:

நியமனம் செய்யப்பெற்றவர் : திரு. டி. ஜெயக்குமார்

முன்மொழிந்தவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
(மேசையைத் தட்டும் ஒலி)

வழிமொழிந்தவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்

பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டு, வேட்புத் தாள் பெறப்பட்டுள்ளதால், திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், இப்பேரவையின் தலைவராக (மேசையைத் தட்டும் ஒலி) ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். இத்துடன் என்னுடைய அலுவல் முடிவடைந்தது.

முற்பகல் 9-35

இப்பொழுது பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 'கடவுளறிய' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.